# அஃபேசியா (aphasia)

அஃபேசியா (Aphasia) என்பது ஒருவரது பேசும் திறனுக்கும், வார்த்தைகளைக் கேட்டு புரிந்து கொள்ளும் திறனுக்கும் கேடு விளைவிக்கும் நோயாகும். இது வழக்கமாக பக்கவாதத்தினாலோ முடக்குவாதித்தினாலோ மூளைக்கு ஏற்படும் சேதத்தினால் உண்டாகிறது.

***அஃபேசியா என்பது என்ன?***

உரையாடும் திறனும், வார்த்தைகளை உள்வாங்கிக்கொண்டு கருத்தறியும் (comprehension) திறனும் குறைபடுவதை அஃபேசியா என்பர். இந்நோயால் அவதிப்படுபவர்களுக்கு பொதுவாக எழுதவும், பேசவும் அதிக முயற்சியும் நேரமும் தேவைப்படும். ஆனால், மொழியாற்றல் குறைந்தாலும், அவர்களுக்கு அறிவுத்திறனோ, ஞாபகச்சக்தியையோ இதனால் குறைவதில்லை.

***அஃபேசியா எதனால் ஏற்படுகிறது?***

இந்நோய் பெரும்பாலும் பக்கவாத்தினால் ஏற்படுகிறது. பக்கவாத்திலிருந்து மீண்டவர்களில் 25-40 சதவிகிதத்தினர் இந்நோயைப் பெறுகின்றனர். மேலும், மூளையில் தோன்றும் புற்றுநோய், கட்டி, வீக்கம் போன்றவற்றாலும் அஃபேசியா உண்டாகலாம்.

***அஃபேசியா எத்தனை பேரை பாதிக்கிறது?***

உலகம் முழுவதும் லட்சக்கணக்கான மக்கள் இந்நோயால் அவதிப்படுகின்றனர். அமெரிக்காவில் மட்டும் இந்நோய் ஆண்டுதோறும் ஒரு லட்சம் பேரை (250-ல் ஒருவரை) பாதிக்கிறது. இது பார்க்கின்சன் நோய் (Parkinson's Disease), தசைநார் மெலிவடைதல் (Muscular dystrophy), வலிப்பு நோய் (cerebral palsy) போன்றவற்றை விடவும் அதிக மக்களை பாதிக்கிறது. ஆனால், பெரும்பாலோருக்கு அஃபேசியா பற்றி தெரிந்திருப்பதில்லை.

***அஃபேசியா எத்தகையோருக்கு ஏற்படுகிறது?***

இந்நோய் பொதுவாக முதியோர்களையே அதிகம் பாதித்தாலும், எந்த வயதினரையும், இனம், பிறப்பிடம், ஆண், பெண் என எந்தவித பாகுபாடும் இல்லாமல் பாதிக்கலாம்.

***அஃபேசியா நோய் உள்ளவருக்கு வேறு உடல் இயலாமை ஏற்படக்கூடுமா ?***

**ஆம், இருக்கும் வாய்ப்பு உண்டு**.பொதுவாக அஃபேசியா உள்ளவர்களுக்கு **வலது** கை, கால்களில் பலவீனமோ, ஆற்றல் இன்மையோ, பக்கவாதமோ, முடக்குவாதமோ ஏற்படும். அஃபேசியா மூளையின் இடது பகுதியை சேதமாக்குவதால், அதன் கட்டுப்பாட்டுக்குள்ளான உடலின் வலது பக்க செயல்பாடுகள் குறைவடைகின்றன.

***இந்நோயால் பாதிக்கப்பட்டவர் தம் வேலைக்கு திரும்ப இயலுமா?***

**சில சமயங்களில் இயலும்.** ஆனால், பெரும்பாலான வேலைகளுக்கு மொழி ஆற்றல் தேவைபடுவதால், அஃபேசியா வேலைகள் செய்வதை கடினப்படுத்துகிறது . இதனால், சில தொழில் மாற்றங்கள் உடன், அதிகப் பேச்சு, எழுத்து, உரையாடல் இல்லாத வேலைகளைப் பெற்றால் அவற்றைச் செய்யலாம்.

***இந்நோயிலுருந்து குணமடைய எத்தனை நாட்களாகும்?***

அஃபேசியாவால் தோன்றிய அறிகுறிகள் இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்கு மேல் நீடித்தால் பூரணமாக குணமடையும் வாய்ப்புகள் குறைவே. ஆனால், விடா முயற்சி, உற்றார் உறவினரின் உற்சாகமூட்டும் ஆதரவு, மாற்று வழிகளில் உரையாடுதல் போன்றவற்றைத் தொடர்ந்தால், சிறிது சிறிதாக முன்னேற்றம் உண்டாகும்.

***இந்நோயால் பாதிக்கப்பட்டவருடன் எவ்விதம் உரையாடுவது?***

- அவர் பேசுவதற்கு அதிக நேரம் கொடுங்கள். அவர் உதவி கேட்டாலொழிய, தடை செய்யாமல் அவரை பேச விடுங்கள்.
- சுற்றுப்புறம் அமைதியாக இருக்க உதவுங்கள்; ரேடியோ,

டி.வி. முதலியவற்றை அணைத்து விடுங்கள்.

- வாயால் பேசுவதை விட, சைகை மூலமாகவோ, படம் வரைந்து காட்டியோ எண்ணங்களை பறிமாற ஊக்கமூட்டுங்கள்.
- நீங்கள் பேசுவதை அவர் புரிந்து கொள்கிறார் என்பதையும் அவ்வப்போது உறுதிப்படுத்திக்கொள்ளுங்கள்.

***அஃபேசியாவால் பாதிக்கப்பட்டவருக்கு அறிவுத்திறனோ, மனநிலையோ குறைபடுமா?***

**நிச்சயமாக இல்லை**. அஃபேசியா மொழி ஆற்றலை பாதித்தாலும், அல்செய்மர் நோய் (Alzheimer's disease) போல் அறிவுத்திறனையோ, ஞாபகச்சக்தியையோ பாதிப்பதில்லை. ஆனால் நோய்வாய்ப்பட்டவர், நிதானமாக, சிரமப்பட்டு வார்த்தைகளை நினைவுக்கூட்டி உரையாடும் போது சற்றே மனநிலை பாதிக்கப்பட்டவர் போல தோன்றக்கூடும்.

***இந்நோயில் வேறுபாடுகள் உள்ளனவா?***

சிலருக்கு இந்த நோயால் பேச்சுத்திறன் மட்டுமே தடைபட்டுப் போகலாம். வேறு சிலருக்கு மற்றவர் வேகமாக பேசினால் மட்டுமே புரியாமல் போகலாம். கடுமையாக பாதிக்கப்பட்டவருக்கோ முற்றிலும் பேசும் திறன், எழுதும் திறன், படிக்கும் திறன் ஆகிய எல்லாமே இழக்க நேரிடலாம். ஆனால் இந்த நோயால் அவதிப்படுபவர் எல்லோருக்குமே ஏதோ ஒரு விதத்தில் மொழி ஆற்றல் குறைவாகவே இருக்கும்.

***இந்நோயைப் பற்றி மேலதிக தகவல்கள் எங்கு கிடைக்கும்?***

அஃபேசியாவைப் பற்றி மேலும் தெரிந்து கொள்ள (800)922-4622 என்ற தொலைபேசி எண்ணுடன் (National Aphasia Association) தொடர்பு கொள்ளுங்கள். அல்லது, www.aphasia.org என்ற வலைத்தளத்தை அணுகி இந்நோயைப் பற்றிய தகவல்கள், இந்நோயுடன் நன்றாக வாழ்வது பற்றிய ஆலோசனைகள், பாதிக்கப்பட்டவருக்கும் அவருடைய உறவினர்களுக்கும் ஆதரவளிக்கும் குழுக்களின் முகவரிகள், பத்திரிகைகள், தேசிய மாநாடுகள் ஆகியவை பற்றி தெரிந்து கொள்ளுங்கள்.

அஃபேசியாவைப் பற்றிய விழிப்புணர்வை அதிகப்படுத்துவதும், இந்நோயால் அவதிப்படுபவருக்கும் அவருடைய குடும்பதினருக்கும் ஆதரவும் உதவியும் அளிப்பதுமே NAA-வின் குறிக்கோளாகும்.

**For more details contact:**

National Aphasia Association
350 Seventh Avenue, Suite 902
New York, NY 10001

1-800-922-4622
www.aphasia.org